**சுருக்கம்**

தொழில்நுட்பக் கல்வி – "Certificate Course in Computer on Office Automation" தேர்வினை ஏப்ரல் 2021–ல் நடத்துவதற்கு அனுமதி மற்றும் தேர்வின் போது கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) மற்றும் தேர்வு மையங்களில் பின்பற்றப்பட வேண்டிய இருக்கை திட்டம் வெளியிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4) துறை**

**அரசாணை (நிலை) எண்.323** நாள்: **18.03.2021**

சார்வரி, பங்குனி 5
திருவள்ளுவர் ஆண்டு – 2052

**படிக்க:-**

1. அரசாணை (நிலை) எண்.47, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 20.02.2002.
2. அரசாணை (நிலை) எண்.190, உயர்கல்வித் (பி) துறை, நாள் 16.12.2020.
3. தொழில்நுட்பக் கல்வி இயக்கக கூடுதல் இயக்குநர் (தேர்வு) கடித எண்.103054/க்யூ3/2020, நாள் 15.02.2021.

•••••••

**ஆணை:**

தொழில்நுட்பக் கல்வித் துறையால் நடத்தப்படும் "Certificate Course in Computer on Office Automation" தேர்வு குறித்த விதிமுறைகள் மற்றும் பாடத்திட்டங்கள் குறித்து மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. தொழில்நுட்பக் கல்வித் துறையால் நடத்தப்படும் "Certificate Course in Computer on Office Automation" தேர்வினை வருடத்திற்கு இரண்டு முறை பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடத்தும் பொருட்டு விதிமுறை 5–ல் திருத்தம் செய்து பார்வை இரண்டில் காணும் அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கூடுதல் இயக்குநர் (தேர்வு), Certificate Course in Computer on Office Automation தேர்வு தொடர்பான அறிவிப்பு இயக்கக இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டியுள்ளதால், தற்பொழுது கொரோனா தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு தேர்வு மையங்களில் தேர்வர்களின் பாதுகாப்பு நலன் கருதி சில மாற்றங்கள் செய்து தேர்வுகள் நடத்த தேர்வுக் குழுவின் பரிந்துரைகளின்படி, ஏப்ரல் 2021–ல் Certificate Course in Computer on Office Automation (COA) தேர்வினை நடத்த அனுமதி மற்றும் தேர்வுகளில் பங்கேற்கும் மாணாக்கர்கள் / தேர்வு நடத்தும் அதிகாரிகள் கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) மற்றும் தேர்வு மையங்களில் பின்பற்றப்பட வேண்டிய இருக்கை திட்டம் ஆகியவற்றிற்கு ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்வி இயக்கக கூடுதல் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று,

மாணாக்கர்களின் நலன் கருதியும், தற்சமயம் உள்ள சூழ்நிலையின் அடிப்படையிலும், "Certificate Course in Computer on Office Automation" தேர்வினை ஏப்ரல் 2021–ல் நடத்துவதற்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், தேர்வுகளில் பங்கேற்கும் மாணாக்கர்கள் / தேர்வு நடத்தும் அதிகாரிகள் கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) மற்றும் தேர்வு மையங்களில் பின்பற்றப்பட வேண்டிய இருக்கை திட்டம் ஆகியவற்றை இணைப்பில் கண்டுள்ளவாறு அரசு வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–05.
முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை–09.
தொழில்நுட்பக் கல்வி இயக்ககத் தேர்வு வாரியத் தலைவர், சென்னை–25.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–09,
உயர்கல்வி மற்றும் வேளாண்மை துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/3/21
பிரிவு அலுவலர்.

## இணைப்பு –1

**Certificate Course in Computer on Office Automation தேர்வில் பங்கேற்கும் மாணாக்கர்கள்/ தேர்வு நடத்தும் அதிகாரிகள் கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) :-**

(1) தேர்வு மையத்தில் தூய்மை பணியாளர்கள் கொண்டு முன்கூட்டியே தூய்மை பணியினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(2) இத்தேர்வானது கருத்தியல் மற்றும் செயல்முறை தேர்வுகள் என்ற அடிப்படையில் கணினிகள் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. கருத்தியல் தேர்வு (Theory) காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை (2 மணி நேரங்கள்) நடைபெறும். காலை 9.00 மணி முதல் 5.30 மணி வரை மாணாக்கர்களின் எண்ணிக்கையை பொருத்து தொகுதி வாரியாக (Batch) செயல்முறை தேர்வுகள் (Practical) நடத்தப்படுகின்றன.

(3) தேர்வில் கலந்து கொள்ளும் மாணாக்கர்கள் / தேர்வு நடத்தும் அதிகாரிகள் குறைந்தபட்சம் மூன்று அடுக்கு (Minimum triple layer face mask) பாதுகாப்புக் கொண்ட முக கவசம் அணிந்து வர வேண்டும்.

(4) மாணாக்கர்கள் தேர்வில் கலந்து கொள்வதற்கு முன்பு கைகளை சோப்பு அல்லது கிருமி நாசினி மூலம் (Sanitizer) சுத்தம் செய்துக்கொள்ள வேண்டும்.

(5) தேர்வு மையத்தில் தேர்வு எழுத வரும் மாணாக்கர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வெப்ப சோதனை (Thermal Scanner) செய்யப்பட வேண்டும். அதில் வெப்பநிலை அதிகமாக இருந்தால் அந்த தேர்வர்களுக்கு தனி அறை ஒதுக்கீடு செய்து தேர்வு நடத்த வேண்டும்.

(6) தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தில் தேர்வு எழுதும் ஒவ்வொரு மாணாக்கருக்கும் இடையில் குறைந்தபட்சம் சுமார் 2 மீட்டர் தூரம் இடைவெளி கடைபிடிக்கப்பட வேண்டும்.

(7) தேர்வு மையத்தில் நோய் வாய்பட்ட / கொரோனா வைரஸ் தாக்குதல் அறிகுறியுள்ள மாணாக்கர்கள் மற்றும் ஊழியர்களை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது.

(8) நுழைவுச்சீட்டு (Hall Ticket) சரிபார்க்கும் இடத்தில் தேர்வு மையங்களுக்குள் வரும் ஒவ்வொரு நபரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை பதிவு செய்வதற்கான பதிவேடு பராமரிக்கவேண்டும். தேவையற்ற உபகரணங்களை தேர்வு அறைக்குள் அனுமதிக்க கூடாது.

(9) தேர்வுக்கு சம்பந்தப்படாதவர்கள் யாரையும் தேர்வு மையங்களுக்குள் அனுமதித்தல் கூடாது.

(10) தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தில் தேர்வு நடத்தும் அதிகாரி / தேர்வர்கள் கையுறை மற்றும் முககவசம் அணிந்திருக்க வேண்டும்.

(11) தேர்வு மைய வளாகத்தில் தேநீர் / காபி / திண்பண்டங்கள் விற்பனை கூடங்கள் அமைத்தல் கூடாது.

(12) தேர்வு மையத்திலிருக்கும் அனைவரும் தேநீர் / காபி அருந்துதல் தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் இதனால் முக கவசத்தை அடிக்கடி நீக்கம் செய்ய வேண்டியிருப்பதால் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது.

(13) தேர்வு மையங்களில் தேவையான அளவு முக கவசம் / கிருமிநாசினி / சோப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

(14) தேர்வு மையத்தில் தும்மல் மற்றும் இருமல் ஏற்படாமல் தவிர்க்க தேர்வு மையத்தின் உள்ளேயும், அதன் சுற்றுபுறத்தையும் தூசி படியாமல் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

(15) மாநகராட்சி / மாவட்ட / நகராட்சி / தாலுக்கா அளவிலான மருத்துவமனை பணியாளர்களின் ஒத்துழைப்புடன் அவசர மருத்துவ குழு அமைத்துக் கொள்ள வேண்டும்.

(16) வெளிமாநிலத்திலிருந்து வரும் தேர்வர்கள் தேர்விற்கு இரு தினங்களுக்கு முன்பாக கொரோனா வைரஸ் பரிசோதனை செய்து அதன் எதிர்மறை அறிக்கையினை தேர்வு அன்று அளித்தல் வேண்டும்.

(17) தேர்வு மையத்தில் கண்டிப்பாக சமூக இடைவெளி கடைபிடிக்கப்பட வேண்டும்.

ராஜீவ் ரஞ்சன்
அரசு தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

18/2/2021

பிரிவு அலுவலர்.

## இணைப்பு –2

## இருக்கை திட்டம்

### கருத்தியல் தேர்வு: (Theory)

| கலம் 1 | கலம் 2 | கலம் 3 | கலம் 4 |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| Vacant | Vacant | Vacant | Vacant |
| 5 | 6 | 7 | 8 |
| Vacant | Vacant | Vacant | Vacant |
| 9 | 10 | 11 | 12 |

### (1) செயல் முறைத் தேர்வு: (Practical)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| PC1 | 1 | | | Vacant | PC12 |
| PC2 | Vacant | | | 6 | PC11 |
| PC 3 | 2 | | | Vacant | PC10 |
| PC 4 | Vacant | | | 5 | PC9 |
| | 3 | Vacant | 4 | Vacant | |
| | PC 5 | PC6 | PC7 | PC8 | |

ராஜீவ் ரஞ்சன்
அரசு தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.